முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 235/2022

2024 வது ஆண்டு நவம்பர் மாதம் 29–ம் நாள் பி.வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சேது ராம சுந்தரம் | வட்டம் | பேட்டை |
| க.பெ /த.பெ | திரு.மாரிமுத்து | கிராமம் | |
| வயது | 46 | மதம் | |

29.11.2024 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 31.03.2017 தேதியிட்ட கிரைய ஆவணம் கணிணி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 (பி.வா.சா.ஆ.1 ன் அசல் தாக்கல் செய்யவில்லை என வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது, பி.வா.சா.ஆ.1 வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 23.10.2013 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் கணிணி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2. 15.11.2013 தேதியிட்ட கிரைய ஆவணம் கணிணி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. 23.03.2017 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் கணிணி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4. 09.11.2021 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் கணிணி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5. 10.01.2003 தேதியிட்ட உயில் ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.6. 29.12.2021 தேதியிட்ட கட்டிட அனுமதி உத்தரவு கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.7 (பி.வா.சா.ஆ.7 வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). டி.எஸ்.நம்பர் 119/1 மற்றும் 2 ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் பி.வா.சா.ஆ.8. டி.எஸ் நம்பர் 119/1 ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் பி.வா.சா.ஆ.9. டி.எஸ் நம்பர் 119/2 ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் பி.வா.சா.ஆ.10. டி.எஸ் நம்பர் 119/1 ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் பி.வா.சா.ஆ.11.

டி.எஸ் நம்பர் 119/2 ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் பி.வா.சா.ஆ.12.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்டுகிறது)**